வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 11.8.2025          நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்தியா, வளர்ச்சிப் பாதையில் பொறுப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

நாட்டின் 79-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஹர் கர் திரங்கா எனும் இல்லந்தோறும் கொடியேற்றும் இயக்கம் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகிறது.

புதுச்சேரியில் 79-ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய கடற்படை இசைக் குழுவின் சிம்போனிக் இசை நிகழ்ச்சி நாளை மாலை பழைய துறைமுக வளாகத்தில் நடைபெற உள்ளது.

மோடி

இந்தியா, வளர்ச்சிப் பாதையில் பொறுப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் உள்ள பாபா கரக் சிங் மார்க்-கில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக 184 வீடுகளுடன் கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று திறந்து வைத்து உரையாற்றினார்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு.......... (வாய்ஸ்)

(வாய்ஸ்)

மோடி (வாய்ஸ்)

புதுடெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக கட்டப்பட்ட பல மாடி குடியிருப்புகளை பிரதமர் திரு நரேந்தி மோடி திறந்து வைத்து பேசுகையில், 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வளர்ச்சி, முன்னிலையை நோக்கி செயல்படுவதாகவும், கடந்த 10 ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக 350 இல்லங்கள் கட்டப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். **ஒரே பாரதம் உன்னத பாரதம்** என்ற அரசின்

கொள்கையை பிரதிபலிக்கும் விதமாக பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே இடத்தில் வசிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த குடியிருப்பு வளாகத்தில் சூரிய சக்தி கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற கர்தவ்ய பவன் திறப்பு விழாவின் போது பேசிய பிரதமர் பல அமைச்சகங்கள் வாடகை கட்டிடங்களில் இயங்கி, சுமார் ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவிடப் பட்டதாகவும், இதன் மூலம் அரசாங்க செலவினங்கள் அதிகரித்து இருந்ததாகவும், குறிப்பிட்டுள்ளார். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிரமங்களை தவிர்த்து பொது மக்களின் தேவைகளை நிறைவேற்ற தங்கள் நேரத்தையும் சக்தியையும் திறம்பட செலவிட முடியும் என்று அவர் தெரிவித்தார். எரிசக்தி, பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, திடக் கழிவு மேலாண்மை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வசதிகளுடன் இந்த வீடுகள் உருவாக்கப் பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார். மேலும் இந்த குடியிருப்புகள் கிருஷ்ணா, கோதாவரி, கோசி, ஹுக்ளி உள்ளிட்ட ஆறுகளின் பெயருடன் வடிவமைக்கப்பட்டது, இந்தியாவின் ஒற்றுமையை பறைசாற்றுவதாகவும் அவர் கூறினார். நிலநடுக்கத்தை தாங்கும் வகையில் இந்த கட்டிடங்கள் அமைக்கப் பட்டுள்ளதாகவும், நவீன வடிவமைப்புகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய இந்த குடியிருப்புகள் சிறப்பாக அமைக்கப் பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயலாற்றி தேசத்திற்கு முன் மாதிரியாக இருப்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார். இந்த அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்ட அனைத்து பொறியாளர்கள் மற்றும் தொழிலாளர்களையும் பிரதமர் பாராட்டினார். முன்னதாக **ஆபரேஷன் சிந்தூர்** வெற்றியை கொண்டாடும் விதமாக **மரக் கன்று** ஒன்றையும் பிரதமர் நட்டு வைத்தார்.

*நாடாளுமன்றம்*

எதிர்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன. பீகார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து எதிர் கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால் அவை அலுவல்கள் நடைபெறாதது குறித்து அவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கவலை தெரிவித்தார். கடந்த 14 நாட்களாக மக்களவையில் அலுவல்கள் பாதிக்கப்படுவதாகவும், ஜனநாயக ரீதியில் இது ஏற்புடையது அல்ல என்றும் அவர் தெரிவித்தார். மேலும் இந்த கூச்சல் குழப்பங்களுக்கு இடையே, மக்களவையில் ஒருங்கிணைந்த வன உயிரின வசிப்பிட மேம்பாடு திட்டம் குறித்த கேள்விக்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் பதில் அளித்தார்.

மாநிலங்களவையிலும் எதிர்கட்சியினரின் அமளி காரணமாக அவை துணைத் தலைவர் திரு ஹரிவன்ஷ் அவையை பிற்பகல் வரை ஒத்தி வைத்தார். பீகார் வாக்காளர் திருத்த முறைக்கு எதிர்ப்பு தெரிவித்த காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, திமுக-வின் திரு டி ஆர் பாலு, சமாஜ்வாதி கட்சி தலைவர் திரு அகிலேஷ் யாதவ், திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் உள்ளிட்டோர் பீகார் வாக்காளர் பட்டியலை திரும்ப பெற வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவை பிற்பகல் 2 மணிக்கு கூடியதும் அவை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு **தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா 2025 மற்றும் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு திருத்த மசோதா 2025** மீதான விவாதங்கள் தொடங்கின. எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையே இந்த 2 சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. மேலும் குரல் வாக்கெடுப்புடன் **வரி விதிப்பு சட்டங்கள் திருத்த மசோதா 2025 மற்றும் வருமானவரி மசோதா** ஆகிய மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து அவைத் தலைவர் மாலை 4 மணி வரை அவையை ஒத்தி வைப்பதாக கூறினார். பின்னர் இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்படுவதாக அறிவித்தார்.

*வணிக கப்பல் மசோதா*

வணிக கப்பல் மசோதா 2024-ஐ நாடாளுமன்றம் இன்று நிறைவேற்றி உள்ளது. இந்த மசோதா கடல் சார் ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச ஆவணங்களின் கீழ் நாட்டின் வணிக கப்பல் போக்குவரத்து தொடர்பான சட்டத்தை திருத்தி அமைப்பதாகும் என்று மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார். இந்த மசோதா குறித்து பேசிய அவர், நாட்டின் கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சியையும், தேசிய நலனுக்கு இந்திய வணிக கப்பல் போக்குவரத்து திறம்பட பராமரிக்கப்படுவதையும் இந்த மசோதா உறுதி செய்யும். மேலும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் கடந்த 11 ஆண்டுகளில் கடல்சார் துறைக்கு பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் திரு சர்பானந்த சோனோவால் கூறினார்.

*திரங்கா*

நாட்டின் 79-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஹர் கர் திரங்கா எனும் இல்லந்தோறும் கொடியேற்றும் இயக்கம் கடந்த 2-ஆம் தேதி முதல் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு....... (வாய்ஸ்)

**புதுடெல்லியில்** தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமும், தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தேச பக்தி திரைப்பட விழா

இன்று தொடங்கியது. ஹர் கர் திரங்காவின் ஒரு பகுதியாக, இந்த திரைப்பட விழா இன்று தொடங்கி வரும் 13-ஆம் தேதி வரை Siri Fort கலையரங்கில் கொண்டாடப்பட உள்ளது. தேசத்தின் உணர்வை போற்றுவதை நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்ச்சியில் டெல்லியின் மொழி, கலை, மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கபில் மிஸ்ரா கலந்து கொண்டு உரையாற்றினார். நிகழ்ச்சியில் பேசிய அவர் ஒவ்வொரு வீட்டையும் ஒரே கொடியின் கீழ் கொண்டு வந்து இந்தியாவின் உணர்வை ஒன்றிணைத்து, மக்களிடையே பிணைப்பை ஆழப்படுத்துவது குறித்து வலியுறுத்தினார்.

**-- லடாக்கில்,** தேச பக்தி ஆர்வத்தை ஊக்குவிக்கவும், இல்லந்தோறும் தேசியக் கொடியை ஏற்றுவதை ஊக்குவிக்கவும் நாடு தழுவிய பிரச்சாரமான **ஹர் கர் திரங்கா**வின் ஒரு பகுதியாக அங்குள்ள சுற்றுலா அலுவலகமான ஜான்ஸ்கரில் திரங்கா அணி வகுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்த நிகழ்ச்சியில் வணிக நிறுவனங்கள், மற்றும் வீடுகளில் பொது மக்கள் தேசியக் கொடியை ஏற்றி நாட்டு பற்றை வெளிப்படுத்தினர்.

**--அசாமில்,** ஹர் கர் திரங்காவின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் உள்ள பொது மக்களும் அரசு நிறுவனங்களும் பல்வேறு பேரணிகள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தன. ஆசாதிக்கா அம்ரித் மகோத்சவத்தின் கீழ் 2022-ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்ட ஹர் கர் திரங்கா பிரச்சாரம் தொடங்கப்பட்டு நாட்டு மக்கள் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை ஏற்றி தேச பக்தி மற்றும் ஒருமைப்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

*பாபா அறிவியல் மையம்*

18-ஆவது சர்வதேச வானியல் மற்றும் வானியற்பியல் ஒலிம்பியாட் நாளை மும்பையில் தொடங்க உள்ளது. மும்பையில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தின், **ஹோமி பாபா அறிவியல் கல்வி** மையம், ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் **அறிவியல் ஆலோசகர்** பேராசிரியர் திரு அஜய்குமார் சூட், அணுசக்தி துறையின் செயலாளர் டாக்டர் அஜித்குமார் மொஹந்தி மற்றும் **சர்வதேச வானியல் ஒன்றியத்தி**ன் முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் திரு அஜித் கெம்பவி ஆகியோர் பங்கேற்க உள்ளனர். இதுகுறித்து இன்று செய்தியாளர்களிடம் பேசிய **ஹோமி பாபா அறிவியல் கல்வி மைய**த்தின் இயக்குநர் பேராசிரியர் அர்னாப் பட்டாச்சாரியா, கூறுகையில் இந்த நிகழ்ச்சி மிகப்பெரிய சர்வதேச வானியல் மற்றும் வானியற்பியல் ஒலிம்பியாட் போட்டியாக இருக்கும் என்று தெரிவித்தார். 10 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் 64 நாடுகளைச் சேர்ந்த 288 மாணவர்கள் பங்கேற்க உள்ளனர்.

*அக்னி வீர்-*

இந்திய விமானப்படை அக்னிவீர் வாயு படையில் சேர்வதற்கான தேர்வுகள் நடைபெற உள்ளது என்று சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் தற்காப்பு பிரிவு அறிவித்துள்ளது. இந்த தேர்வுகள் தமிழ்நாடு, புதுச்சேரி, ஏனாம், அந்தமான், நிகோபார் மற்றும் லட்சத் தீவுகள் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த திருமணம் ஆகாத இளைஞர்களுக்கு வரும் செப்டம்பர் 2 மற்றும் 3-ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. தெலங்கானா மற்றும் ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்த ஆண் விண்ணப்ப தாரர்களுக்கான தேர்வுகள் இம்மாதம் 27 மற்றும் 28-ஆம் தேதிகளில் நடைபெறும் என்றும், கேரளா மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த ஆண் தேர்வர்கள் இம்மாதம் 30 மற்றும் 31-ஆம் தேதிகளில் நடைபெறும் தேர்வுசுளில் கலந்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் தகுதி தேர்வுகளை செப்டம்பர் 5 மற்றும் 6-ஆம் தேதிகளில் எழுத அனுமதிக்கப் படுவார்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஜனவரி-1, 2005-ஆம் ஆண்டு முதல் ஜுலை 1, 2008-ஆம் ஆண்டு வரை பிறந்தவர்கள் இந்த ஆள்சேர்ப்பு தேர்வுகளில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளஸ் டூ அல்லது அதற்கு இணையான தேர்வுகளில் 50 சதவிகித தேர்ச்சி பெற்றவர்களும், பொறியியல் பிரிவுகளில் 3 வருட டிப்ளமோ படிப்பு முடித்தவர்கள் 50 சதவிகித தேர்ச்சி பெற்றவர்களும் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர். விண்ணப்ப தாரர்கள் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள், படிப்பு சான்றிதழ்கள், மதிப்பெண் பட்டியல்கள் மற்றும் வசிப்பிட சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களை விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

*புதுச்சேரி-சிம்பொனி*

புதுச்சேரியில் 79-ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய கடற்படை இசைக் குழுவின் சிம்போனிக் இசை நிகழ்ச்சி நாளை மாலை பழைய துறைமுக வளாகத்தில் நடைபெற உள்ளது. இதற்கான ஒத்திகை நிகழ்ச்சி இன்று மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இந்திய கடற்படையின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கொடி அதிகாரி ரியர் அட்மிரல் சத்தீஷ் ஷெனாய் உள்ளிட்ட பலர் பங்கேற்க உள்ளனர். இந்நிகழ்ச்சிக்கு பொது மக்கள் வரவேற்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியா, வளர்ச்சிப் பாதையில் பொறுப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

நாட்டின் 79-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஹர் கர் திரங்கா எனும் இல்லந்தோறும் கொடியேற்றும் இயக்கம் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகிறது.

புதுச்சேரியில் 79-ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய கடற்படை இசைக் குழுவின் சிம்போனிக் இசை நிகழ்ச்சி நாளை மாலை பழைய துறைமுக வளாகத்தில் நடைபெற உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 11.8.2025/Script./